1973 ஆகஸ்ட் 13]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 1972-73 கடைசிப் பகுதி வரையிலே கடிதம் எழுதியிருக்கிறேம். 1961-லே இது ஆரம்ப மானது. மத்திய அரசாங்கத்தின் ஒப்புதலே எதிர்பார்த்து இந்த அரசு வேலேயை ஆரம்பிக்கலாமா என்று யோசனே செய்து கொண்டிருக்கிறது.

Peruvaripallam Dam.

* 110. *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR : **Will the** Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the total quantity of water stored at Peruvaripallam Dam as on February 1973; and

(b) the total area of land likely to benefit therefrom?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) துனக்கடவு நீர்த் தேக்கமும் பெருவாரிப்பள்ளம் நீர்த்தேக்கமும் ஒரு வாய்க்காலால் ஒன்றிணைக்கப்பட்ட ஒரே நீர்த்தேக்கமாகும். இவைகளின் நீர் மட்டம் 1973-ம் ஆண்டு பிப்ரவரி முதல் தேதியன்று 1754.64 ஆக இருந்தது. இந்த மட்டத்திற்கு நீரின் கொள்ளளவு 633 மில்லியன் கன அடியாகும்.

(இ) மின் சக்தி உற்பத்தி செய்ய தேவையான குறைந்த பட்ச நீரின் மட்டம் 1761.00 ஆகும். பிப்ரவரி மாதம் முதல் தேதி யன்று நீரின் மட்டம் மின் சக்தி இயக்குவதற்கான குறைந்த பட்ச மட்டத்திற்கும் தாழ்வாக இருந்ததால் குடைவு வழியின் தரை மட்டத்திற்கு மேலே இருந்து 125 மில்லியன் கன அடி நீர் மின்சக்திக்கும் பயன்படாமல் நீர்ப்பாசனத்திற்குப் பயன்பட இருந்தது. இது சர்க்கார்பதி மாற்று வழியின் மூலம் கொண்டு செல்லப்பட்டது. இந்த 125 மில்லியன் கன அடி நீரினல் 1,042 ஏக்கர் பாசன வசதி அடையக்கூடும்.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலேவரவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் மணிமுத்தாறு நீர்த்தேக்கம், பாபநாசம் நீர்த் தேக்கம் ஆகியவைகளின் மூலம் உள்ள விவரத்தைச் சொல்வார் களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிக்கேள்வி **வேண்டும்.**